தமிழ்நாடு அரசு

# மூன்றாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

தொகுதி - 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

Tamil 3rd-std_Term2.indd 1 7/29/2019 1:24:07 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*
திருத்திய பதிப்பு - *2020*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



Tamil 3rd-std_Term2.indd 2 7/29/2019 1:24:07 PM

## முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



Tamil 3rd-std_Term2.indd 3 7/29/2019 1:24:07 PM

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

---

## நாட்டுப்பண் - பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!






Tamil 4th-std_Term3.indd 4 7/20/2019 6:13:51 PM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



Tamil 3rd-std_Term2.indd 5 7/29/2019 1:24:09 PM



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



Tamil 3rd-std_Term2.indd 6 7/29/2019 1:24:09 PM

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்



# முன்னுரை

**குழந்தைகள் பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!**

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி, சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும், குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் **வாங்க பேசலாம்**.





குழந்தை வகுப்பறைச் சூழலைத் தாண்டிச் சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் **சிந்திக்கலாமா?**

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித்திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் **மொழியோடு விளையாடு**.










Tamil 3rd-std_Term2.indd 8 7/29/2019 1:24:10 PM



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**






மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோமா?**

ஒற்றுமையுடன் சேர்ந்து செயல்பட உதவும் **இணைந்து செய்வோம்**




புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

**பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்!**

QR GUIDE

- உங்கள் திறன்பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்திப் பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப் பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஒரு QR code Scanner பயன்படுத்தவும்.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும்
இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும்
ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த
சமூகம் அமையட்டும்

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.





Tamil 3rd-std_Term2.indd 9 7/29/2019 1:24:11 PM

# பொருளடக்கம்


| வ எண் | தலைப்பு | பக்கம் | மாதம் |
| --- | --- | --- | --- |
| 1. | உண்மையே உயர்வு | 1 | அக்டோபர் |
| 2. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | 5 | அக்டோபர் |
| 3. | கல்வி கண் போன்றது | 11 | அக்டோபர் |
| 4. | திருக்குறள் கதைகள் | 18 | நவம்பர் |
| 5. | வாலு போயி கத்தி வந்தது! டும்...டும்.. டும்...டும் | 26 | நவம்பர் |
| 6. | எழில் கொஞ்சும் அருவி | 32 | நவம்பர் |
| 7. | நாயும் ஓநாயும் | 40 | டிசம்பர் |
| 8. | நட்பே உயர்வு | 48 | டிசம்பர் |
| | அகரமுதலி | 54 | |






P1P9IX
மின்னூல்

AF8VQE
மதிப்பீடு

B313_3_TAMIL_LANG
இணைய வளங்கள்



Tamil 3rd-std_Term2.indd 10 7/29/2019 1:24:12 PM